முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1259

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.03.2023, சனிக்கிழமை

1. கருணை வடிவான வள்ளலே
   கலியுகத்தை காக்கும் அண்ணலே
   தர்மபலம் கொண்டு உலகினில்
   தனித்துவம் படைத்த மாதவராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 27 ம் நாள், 11.03.2023, சனிக்கிழமை)
   வரமென அரங்கன் திருவடி பற்றி
   வையகத்தில் மாந்தரெல்லாம் ஓங்காரக்குடில் நோக்கி
3. நோக்கியே தொடர்ந்து வந்து இனிதே
   நிலவுலகில் சரணாகதி கொண்டுவிட்டால்
   ஆக்கமுடன் அனைவரும் ஞானியாவர்
   அகிலத்தை மாற்றும் மகா சக்திகளாக மாற்றம்பெறுவர்
4. மாற்றம் தரவந்த மாதவசி அரங்கன்
   மக்களை மீட்க வந்த மகா யோகி தேசிகன்
   ஆக்கமுடன் இதை உணர்ந்து தெளிந்து
   அகிலத்தார் அரங்கன் பால் சரணாகதி கொண்டு
5. ஐயனே அரங்கனே முருகனே என
   அவரவர் அனுதினம் வேண்டி வர
   வருபவர்க்கு அரங்கனால் இனிபிறவாப்பேறு
   வரமாக சடுதி உறுதியாகக் கிட்டும்
6. தருகின்ற குணம்கொண்டு அரங்கன் வழி
   தயவாக தொடர்ந்துவரும் மக்களெல்லாம்
   ஆறுமுகன் என் அருளைப்பெறுவதோடு
   அழியாமை பெற்று இனி பிறவாபெரும்பேறு அடையநேரும்
7. நேர்மைகொண்டு உலகினில் அரங்கனின்
   நீதிகாக்கும் அன்னதானச் சேவையை
   வறுமையிலும் விடாது தொடர்ந்து செய்து
   வளமாகும் வண்ணம் தொடர்ந்து சரணாகதிகாண
8. காண்பவர்க்கெல்லாம் அருள்பொருள் வளமோடு
   கலியுகத்தில் அரங்கனால் சர்வபலமும் உண்டாகும்
   தருகின்றேன் அரங்கன் வழியே அவர்கட்கெல்லாம்
   தரணியில் ஞானிகளாகும் வாய்ப்பை ஆறுமுகன் யான்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–